புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கவிஞர் பா.விஜய்யின் காற்சிலம்பு ஓசையில் காணலாகும் கதையமைப்பு

**கட்டுரையாளர்**

**முனைவர்.மு. ரேவதி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர்
கலை அறிவியல் கல்லூரி
கோவை – 44.

**ஆய்வுச் சுருக்கம்**

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் பண்பாட்டினையும் கலாச்சாரத்தினையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் விளக்கும் வரலாற்று இலக்கியமாக விளங்குவதில், சிலப்பதிகாரத்திற்கு நிகர் சிலப்பதிகாரமே ஆகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழின் தொன்மையானச் சிலப்பதிகாரக் காப்பியத்தினைத் தழுவி பல படைப்பாளர்கள் பல வடிவங்களில் மறுபடைப்பாக்கம் செய்துள்ளனர். பண்டைய இலக்கியம் மறுபிறவி எடுப்பதற்கு இன்றைய மறுவாசிப்புச் சூழல் காரணமாக அமைகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் மாற்று வடிவங்களை ஆராயும் போது, அக்காப்பியம் பற்றிய மதிப்பீடுகளின் வரலாற்றை அறிந்து கொள்வதோடு, தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றையும், தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றையும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வரிசையில், தமிழின் ஒப்பற்றக் காப்பியமாகத் திகழும் சிலப்பதிகாரத்தினைக் கவிஞர் பா.விஜய் **'காற்சிலம்பு ஓசையிலே'** என்னும் பெயரில் புதுக்கவிதை வடிவில் மறுபடைப்பாக்கம் செய்துள்ளார். எந்த ஒரு இலக்கியப் படைப்பும் அதன் வெளியீட்டுத் திறனாலேயே வெற்றி பெறுகின்றது. இவ்வெற்றியை எட்டப் படைப்பாளன் பல்வேறு முறைகளைக் கையாளுகிறான். படைப்பாளன் தான் கூற விரும்பும் கருத்துக்களை வாசகர் மனதில் பதியும் வண்ணம் கூறுவதற்குக் கையாளும் உணர்த்து முறையே உத்தி எனலாம். படைப்பாளிகள் எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும் அவருடைய படைப்பில் நல்ல உத்தி நுணுக்கங்கள் இல்லையென்றால் படைப்பு சிறக்காது. படைப்பாளன் தன் கருவை விளக்குவதற்காகக் கையாளப்படும் அனைத்து முறைகளும் உத்திகள் ஆகும். கட்டுரை, கவிதை, நாடகம், சிறுகதை, புதினம் என்று எவ்விலக்கிய வகையாக இருந்தாலும், வாசகனைச் சரியாகச் சென்றடைய அதற்கு பல்வேறு படைப்பு உத்திகள் பின்பற்றப்படுகின்றன. அந்த வகையில் பல்வேறான படைப்பு உத்திகளுள் ஒன்றாகக் கதையமைப்பும் விளங்குகின்றது. **கவிஞர் பா.விஜய்** இயற்றியக் **காற்சிலம்பு ஓசையிலே** என்னும் படைப்பில் கதையமைப்பு வெளியாகியிருக்கும் பாங்குக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

இலக்கியம் என்பது மக்கள் சமூகத்தை உள்ளடக்கியது. வடிவங்கள், அமைப்பு முறைகள், உத்திகள், பாடுபொருள்கள், அழகியல் தன்மைகள் என்று காலந்தோறும் மாற்றங்களுக்கு உள்ளாகிக் கொண்டே வந்தாலும், அவை அனைத்தும் அந்தந்தக் கால மக்கள் சமூகத்தின் வாழ்வியலை மையமாகக் கொண்டே அமைந்தன. மக்கள் வாழ்வியலின் பன்முகப் பரிமாணங்களை உள்ளடக்கிக் கொண்டு, மக்கள் வாழ்வியலில் நல்ல மாற்றங்களை உருவாக்கி வாழ்தரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் தான் எல்லா நல்ல இலக்கியங்களும் நோக்கங்களாகக் கொண்டுள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இலக்கியங்களின் வளர்ச்சிக் கூறுகளில் ஒன்றாக இடம் பெறுவது பழந்தமிழ் இலக்கியங்களின் மீதான

மறுபடைப்புகள் ஆகும். ***"வாழ்ந்து, பின் இழந்து போன உலகம் பொன்னுலகம், இடையில் வந்து சேர்ந்தது ஓர் இருள் உலகம்; பொன்னுலகம் மீட்டினால், வரும் ஒரு புது உலகம்"*** என்ற சிந்தனையையும், நம்பிக்கையையும் குறிப்பது ***"மீட்டுருவாக்கம்"*** என்ற கருத்தியலாகும். மனித குல வரலாற்றில் மீட்டெடுப்புகளுக்கானச் சிந்தனைச் சமூக மேம்பாட்டிற்கான ஒரு வாயிலாகவும், ஒரு உந்துதலாகவும் அமைகிறது. அவ்வரிசையில், தமிழின் ஒப்பற்றக் காப்பியமாகத் திகழும் சிலப்பதிகாரத்தினைக் கவிஞர் பா.விஜய் ***'காற்சிலம்பு ஓசையிலே'*** என்னும் பெயரில் புதுக்கவிதை வடிவில் மறுபடைப்பாக்கம் செய்துள்ளார். **கவிஞர் பா.விஜய்** தனது **காற்சிலம்பு ஓசையிலே** என்னும் இப்படைப்பில், எங்ஙனம் கதையின் அமைப்பினை தனது கருத்திற்கும், பகுத்தறிவு கொள்கைக்கும் ஏற்றவாறு படைத்துள்ளார் என்பதினை இக்கட்டுரையில் காணலாம்.

**ஆய்வு அணுகுமுறை**

தரவுகளைத் தொகுப்பது, பகுப்பது, விளக்குவது என்ற நிலைகள் எந்த ஓர் ஆய்விற்கும் பொதுவானவையே. அவ்வகையில் இவ்வாய்வில், தொகுப்பு முறை, பகுப்பாய்வு முறை மற்றும் விளக்க முறை ஆகியன பின்பற்றப்பட்டுள்ளன. சிலம்பினைத் தழுவிய மறுபடைப்பாக்க நூலாதலால் இவ்வாய்வில் ஒப்பீட்டு முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கதையமைப்பு விளக்கம்**

கதையில் வரும் நிகழ்ச்சிகளைக் கட்டமைப்புச் செய்து கோர்வையாகப் படிப்பவர்களுக்குச் சுவையாகத் தருவது கதையமைப்பு ஆகும். அமைப்பு என்பது நிகழ்ச்சி வைப்பு முறையிலான கதைப்பின்னலையும் அதன்வழி வெளிப்படும் கருத்தமைப்பையும் ஒரு சேரக் குறிப்பதாகும். இரண்டும் ஒன்றோடொன்று செறிவாகப் பின்னிப் பிணைந்து வருமாறு அமைப்பது தான் சிறந்த அமைப்பாகும். இதனை, ***"கதையில் இடம்பெறும் கருப்பொருளின் புலப்பாடு, கதைமாந்தர் வளர்ச்சி, பண்பு வெளிப்பாடு என்ற அனைத்தையும் உள்ளடக்கிய வடிவம் அமைப்பு ஆகும்." (சு.வேங்கடராமன், அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, ப.140)*** என்ற கூற்றின் மூலம் அறிய முடிகின்றது.

**கதையமைப்பின் வகைகள்**

படைப்பாளியின் மன உணர்வுகளுக்கேற்ப கதையமைப்புகள் வேறுபடலாம். பொதுவாகக் கதைகளில் காணப்படும் அமைப்பு முறையினை இரு வகையாக வகைப்படுத்துவர். அவை **ஆற்றொழுக்கமைப்பு, முறை மாறிய அமைப்பு** என்பனவாகும்.

**ஆற்றொழுக்கமைப்பு**

கதையின் தொடக்கத்தில் இருந்து அடுத்தடுத்து நிகழ்ச்சிகளை முறையாகக் கூறிச் செல்வது ஆற்றொழுக்கமைப்பு ஆகும்.

**முறை மாறிய அமைப்பு**

கதையின் முதல், இடை, கடை நிகழ்ச்சிகளை மாற்றிக் கூறுவது முறை மாறிய அமைப்பு எனலாம். முதலில் நடப்புக் கால நிகழ்ச்சியைக் கூறி, பின்னர்க் கடந்த கால நிகழ்வைக் குறிப்பிட்டு, தொடர்ந்து நடப்புக் கால நிகழ்வோடுக் கதையினை இம்முறையில் முடிப்பர்.

**கதையமைப்பின் முக்கியக் கூறுகள்**

சிலப்பதிகாரத்தை மூல நூலாகக் கொண்டு கவிஞர் பா.விஜய் காற்சிலம்பு ஓசையிலே என்னும் பெயரில் தனது படைப்பினை வழி நூலாக இயற்றியுள்ளார். அதன்படி சிலப்பதிகாரத்தின் பதிகச் செய்தியிலிருந்து வரம் தரு காதை வரையிலான, கோவலன் கண்ணகியின் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் நிகழ்ச்சி வைப்பு முறை மாறாமல் அவ்வாறே கவிஞர் பா.விஜய்யும் அமைத்துள்ளார். எனவே இப்படைப்பு ஆற்றொழுக்கமைப்பு முறையில் அமைந்துள்ளது எனலாம். இக்கதையமைப்பின் முக்கியக் கூறுகளாவன **கதைத் தொடக்கம், கதையின் வளர்ச்சி, கதையின் உச்சக்கட்டம், கதையின் திருப்பம், கதை முடிவு** என்ற ஐந்துக் கூறுகளாகும். கவிஞர் பா.விஜய் தனது காற்சிலம்பு ஓசையிலே என்னும் இப்படைப்பில் மேற்கூறிய ஐந்துக் கூறுகளை எங்ஙனம் கையாண்டுள்ளார் என்பதினைப் பின்வருமாறு காணலாம்.

**கதைத் தொடக்கம்**

ஒரு கதையின் தொடக்கத்தையும், முடிவையும் எப்படியும் அமைக்கும் உரிமை படைப்பாளருக்கு உண்டு. எனினும், ஒரு படைப்பாளர் படிப்பவரின் ஆர்வத்தையும், கற்பனையையும் தூண்டக்கூடிய

*வகையில் தம் கதையைத் தொடங்குதல் வேண்டும். கதையின் தொடக்கவரி நெஞ்சை அள்ளும் வகையில் அமைந்து கதையின் முழுப் பொருளையுமே குறிப்பால் புலப்படுத்துதல் வேண்டும். மேலும் கதையின் தொடக்கம் ஓர் உயிர்மூச்சு பேன்று அமைகின்றது. தொடக்கம் சரிவர அமையவில்லையென்றால் கதை முழுக்கக் கோணலாகிவிடும். ஆகவே இறுதிவரை செப்பமான முறையில் இருக்க வேண்டுமானால் கதையின் தொடக்கம் கதைக்கு வாயில் போன்று அமைய வேண்டும். சுருங்கக்கூறின், கதை வெளிப்பாட்டுத் திறனில் தலைமை இடத்தைப் பெறுவது கதையின் தொடக்கமே ஆகும். இத்தகையச் சிறப்பு வாய்ந்த தொடக்கத்தினைக் கவிஞர் பா.விஜய் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதினைப் பின்வருமாறு காணலாம்.*

***நிலா நேரத்தில் தொடங்கி செய்தியா? செந்தீயா? வரை***

*கவிஞர் பா.விஜய்* ***நிலா நேரத்தில்*** *என்ற இயலில் இருந்து,* ***செய்தியா? செந்தீயா?*** *என்ற இயல் வரையுமான மொத்தம் 17 இயல்களில் கதையின் தொடக்க நிகழ்வுகளைக் கூறியுள்ளார். வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான கதையானாலும், கவிஞர் பா.விஜய் தனது இப்படைப்பின் தொடக்கமாகக் கோவலன், கண்ணகியின் திருமணத்தை அமைக்காமல், பதிகச் செய்தியிலிருந்தும், செவிவழி நாட்டார் கதைப்பாடல் செய்திகளிலிருந்தும் தொடங்கி புதுமையைப் புகுத்தியுள்ளார்.*

*கதையின் தொடக்கத்தில் இளங்கோ அடிகள், ஒரு கவிஞனாகக் கவிதைப் புனைந்துக் கொண்டிருக்கிறார். சேரன் செங்குட்டுவனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறும் வேளையில், நிமித்திகன் குறுக்கிட்டு,*

***இளையவன்***
***இளங்கோவனுக்குத்தான்***
***கிடைக்கும் கிரீடம்!   (கா.சி.ஓ.பா.1:2,ப.88)***

*என்று கூறுகிறான். அதைக் கேட்டு, அவையில் இருந்த அத்துணைப் பேருக்கும் கோபம் பெருக்கெடுத்தது. அப்போது இளங்கோ, உன் சொல் என்றும் பலிக்காது என்று உள்ளறைக்கு ஓடினான்.*

***வெளியே வந்தான்!***
***வெண்புறாவாக.... (மேலது, ப.19)***

*துறவியாக மாறிவிட்டான் இளங்கோ என்று, செவிவழிச் செய்தியினைக் கவிஞர் முதல் 2 இயல்களில் கூறியுள்ளார். கவிஞர் பா.விஜய் இப்படைப்பினை மக்களுக்கு நல்லறங்களைப் போதிப்பதற்காக படைத்துள்ளார் என்பதற்கு சான்றாக,* ***அருவி நதியாக*** *என்னும் மூன்றாம் இயலில், இளங்கோவடிகள் மக்களுக்கு வாழ்வியல் நெறிகளைப் போதிப்பதாக நல்தொடக்கத்தினை அமைத்துள்ளார்.*

*கவிஞர் பா.விஜய்க்கு, தமிழின் மீது உள்ள அதீத பற்றுதல் காரணமாக, நான்காம் இயலான* ***பெய்யெனப் பெய்யும் மழை*** *என்பதில், தனது கற்பனைத் திறனைக் கொண்டு, சேரநாட்டில் மழை இல்லாதக் காரணத்தால் பஞ்சம் ஏற்பட்டதாகவும், அதனால் சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகளிடம் ஆலோசனைக் கேட்பதாகவும் அமைந்துள்ளார். அதற்கு இளங்கோவடிகள்,* ***'தமிழ்மறை'*** *எனப் போற்றப்படும் திருக்குறளினை நடுவில் வைத்து அதனைச் சுற்றி சுள்ளிகளை வைத்துத் தீ மூட்டுகின்றார். சுவடிகளைச் சுற்றிலும் உள்ள சுள்ளிகள் சாம்பலாயின. திருக்குறனைத் தீ நெருங்குவதற்கு முன்பே, சடசடவென சண்ட மாருத மழை பெய்கின்றது. இவ்வாறு தமிழ் மொழியின் சக்தியினையும், அதன் மீது கவிஞருக்குள்ள ஈடுபாட்டினையும் கதையின் தொடக்கத்திற்குள் கொண்டு வந்துள்ளார்.*

***சரித்திரம் பூப்பறிக்கிறது*** *என்ற ஐந்தாவது இயலில், சிலம்பின் பதிகச் செய்தியினைக் கூறியுள்ளார். சிலம்பில் மலைவளம் காணச் சென்ற சேரன் செங்குட்டுவன், வேண்மாள், இளங்கோவடிகள், சாத்தனார் ஆகியோரிடம் மலைக் குறவர்கள், தாங்கள் கண்ட வியப்புக்குரிய செய்தியினைக் கூறுகின்றனர். இங்கு வேனிலாற்றங்கரையில் இருந்த இளங்கோவடிகளைக் காண, சேரன் செங்குட்டுவன், வேண்மாள், சாத்தனார் ஆகியோர் வந்து இருந்த போது, ஒரு விவசாயி அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்து, தான் கண்ட வியப்புக்குரிய செய்தியினைக் கூறுகின்றான்.*

*விவசாயி சொன்ன செய்தியினைக் கேட்டதும், கவிச்சாத்தனார் அவள் பெயர் கண்ணகி என்றும், அவளின் வரலற்றினைத் தான் கூறுவதாகவும் கூறி கண்ணகியின் கதையினை முழுவதுமாகக் கூறி முடிக்கிறார். அக்கதையினை இளங்கோவடிகள் தன் நெஞ்சில் விதையாக வாங்கிக் கொண்டார். பிறகு,*

*சாத்தனார், சேரன் செங்குட்டுவன் மற்றும் மக்களின் விருப்பத்திற்கு இணங்கி சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்று சிலம்பின் பதிகச் செய்தியினை தன் நோக்கில் வெளிப்படுத்தியுள்ளார். இதனை,*

***அந்தக் குழந்தை பேசிய***
***மழலை மொழியின்***
***முதல் உச்சரிப்பே***
***'அம்மா' அல்ல***
***புரட்சி !*** **(மேலது,பா.1:5,ப.3)**

*என்று சிலப்பதிகாரத்தைக் கவிஞர் மிகவும் போற்றியுள்ளார். இதன் மூலம் கவிஞருக்கு சிலம்பின் மீதுள்ள ஈடுபாட்டினை அறிய முடிகின்றது.*

*சிலம்பின் புகாரக் காண்டத்தின் தொடக்கக் காதையின் நிகழ்வுகளைக் கவிஞர்* ***புகார் நகரம் - புகழின் சிகரம்*** *என்ற ஆறாவது இயலில் கூறுகின்றார். புகார் நகரின் செல்வ வளமையை எடுத்துரைக்கும் போதே, அந்நகரில் வசிக்கும் மாநாய்க்கன், மாசாத்துவான் என்ற இரு பெரிய வணிகர்களின் செல்வச் செழிப்பையும் சுட்டிக்காட்டி, அவர்களின் மக்களான கண்ணகி, கோவலனின் அறிமுகத்தையும் கூறி, இருவருக்கும் திருமணம் நடக்க விருக்கும் செய்தியினையும் கூறுகின்றார்.*

***திருமணக் கூடமா? திரிசங்கு லோகமா?*** *என்ற ஏழாவது இயல் முழுவதும் கண்ணகி, கோவலனின் திருமணச் செய்தியினையே கூறியுள்ளார். இரண்டு பெரிய வணிகர்களுக்கிடையில் ஆன திருமண நிகழ்வு என்பதால் அதைப் பெருமளவில் வருணித்துக் கூறியுள்ளார்.*

***உபசரித்து உபசரித்தே***
***மாசாத்துவாரும்***
***மாநாய்கரும்***
***ஆளுக்கொரு பக்கமாய்***
***அண்ணாந்து விழுந்தனர்!*** **(மேலது,பா.1:7,ப.58)**

*என்று கூறுகின்றார். மேலும் சிலம்பில் திருமணம் முடிந்ததும், கோவலனும், கண்ணகியும் பேசியதாகக்காணப்படாது. ஆனால் இங்கு* ***"உனக்கு நான், எனக்கு நீ"*** *என்று இருவரும் திருமண ஒப்பந்தம் அல்லது வாக்குறுதி கொடுத்துக் கொள்வதாகக் கவிஞர் படைத்துள்ளார்.*

***சுவாசம் தந்த வாசம், அமளி மீது அமளி*** *என்ற எட்டாவது மற்றும் ஒன்பதாவது இயல்களில், கோவலன், கண்ணகியின் இன்பமான இல்லற வாழ்வுப் பற்றி எடுத்துரைத்துள்ளார்.* ***கால்கள் எழுதிய கவிதை, ஆடியது பாதாமா? பம்பரமா?*** *என்ற பத்து மற்றும் பதினோறாவது இயல்களில் மாதவியின் அறிமுகத்தையும், அவளின் நாட்டியத் திறமையால் அவள் பெற்றத் தலைக்கோல் பட்டத்தையும் பற்றிக் கவிஞர் எடுத்துரைத்துள்ளார். சிலம்பில் அரங்கேற்றுக் காதையிலேயே மாதவியின் அறிமுகம், நடனம், பிறகு கோவலன் மாதயியின் மாலையைக் கூனியிடம் இருந்து விலைக்கு வாங்கி அவள் மனையிடம் புகுந்தான் என்று காணப்படும்.*

*ஆனால், இங்கு மாதவியின் நடனத்தைக் கண்ட பிறகும் கோவலன் நிலைத் தடுமாறாமல் கண்ணிகியுடன் சேர்ந்து இன்பமாக இல்லற வாழ்வைத் தொடர்ந்து நடத்தினான் என்று* ***காற்றுக்கா கடிவாளம்*** *என்ற பன்னிரெண்டாவது இயலில் கூறுகின்றார்.*

*மேலும், மாதவியின் கற்புத் திறத்தை எடுத்துக்காட்ட* ***கற்புக்கரசி மாதவி*** *என்னும் பதிமூன்றாவது இயலினைப் படைத்துள்ளார். இதில் மாதவியின் தாய் சித்ராபதி, கலிங்கக் கப்பல் ஒன்றினை வெகுமதியாகப் பெற்றுக் கொண்டு, மாதவியினை தண்டநாய்கர் என்னும் செல்வந்தனுக்கு விலைப் பேசுகிறாள். இதனை அறியாத மாதவி, தண்டநாய்கர் முன்னால் நடனம் ஆடுகின்றாள். ஆனால் தண்டநாய்கரின் இரட்டை அர்த்தப் பேச்சால் மாதவிக்கு உண்மைப் புரிந்து அவரை வெளியே அனுப்புகின்றாள். இதனை,*

***"நீ கிள்ளி எறிய***
***மாதவி ஒன்றும்***
***மணத்தக்காளிக்கீரையல்ல***
***சோழன் வீட்டுத் துளசிச்செடி!"*** **(மேலது,பா.1:3,ப.106)**

*என்ற வரிகளால் மாதவியின் கற்புத் திறத்தைப் போற்றியுள்ளார்.*

***கல்லணைக்கும் காதல் அணைக்கும் திறப்புவிழா*** *என்ற பதினான்காவது இயலில், தண்டநாய்கரை அவமதித்ததால் கோபமுற்றிருந்த சித்ராபதி, மாதவியின் தோழியான வசந்தமாலையை அழைத்து, மாதவியின் மாலை ஒன்றைக்கொடுத்து, இதனை 1008 பொன் தந்து வாங்கும் எந்த ஆடவனுக்கும் மாதவி சொந்தம் என்று விற்று வர அனுப்புகிறாள். மறுபுறம், கரிகால் பெருவளத்தான் கட்டியக் கல்லணையின் திறப்பு விழாவிற்குக் கோவலன் வருகின்றான். வரும் வழியில் பெண்ணொருத்தி மாலை வாங்கினால் மாதவி சொந்தம் என்று கூறியதைக் கேட்டான். மேலும் பொன்மாலை குவியும் புகாரில் பூமாலை வாங்கும் புரவலர்கள் கிடையாதா? என்று கேட்டதும், கோவலன் நான் வாங்குகிறேன் என்று மாலையை வாங்கினான். பிறகு மாலையை வசந்த மாலையிடமே திருப்பிக் கொடுத்து,*

***"பெண்ணைப்***
***பொருளுக்கு வாங்குவது***
***தமிழர் மரபல்ல! "*** ***(மேலது,பா.1:14,ப.115)***

*என்றுக்கூறி, மாதவி ஏதாவது ஒரு வல்லூறிடம் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்ற எண்ணத்தில் தான் நான் வாங்கினேன்; மாலையையும், பொன்னையும் மாதவியிடமே கொடுத்து விடு என்று கூறிச் சென்று விட்டதாகக் கவிஞர் படைத்துள்ளார்.*

*இச்செய்தியைக் கேள்விப்பட்டதும், கோவலனின் பண்பு நலத்தினால் ஈர்க்கப்பட்ட மாதவி, உடனே வணிகர் வீதிக்குச் செல்லத் தேரைப் பூட்டச் சொன்னாள். கல்லணை திறந்த நேரம், மாதவியின் மனதிலும் காதல் என்னும் அணை திறந்துவிட்டதாகக் கவிஞர் கூறியுள்ளார்.* ***வீதியில் விழலாமா வெண்ணிலா*** *என்ற பதினைந்தாவது இயலில், மாதவியின் மனம் முழுவதும் கோவலன் நினைவே சூழ்ந்திருந்தது. வணிகர் வீதியை அடைந்த மாதவி, கோவலனுக்காகப் பரிசு ஒன்று வாங்குவதற்காக, கடையில் நுழைந்த போது, அங்கிருந்த தண்டநாய்கர், தன் ஆசை நிறைவேறாத சீற்றத்தினால், மாதவியை அவதூறாகப் பேச ஆரம்பித்தார். மக்கள் எல்லோரும் கூடி வேடிக்கைப் பார்த்தனர். மாதவி அவமானப்பட்டுக் கொண்டிருந்த போது, கோவலன் அங்கு வந்து, அவளை மீட்கும் பொருட்டுத் தன் யானையில் ஏற்றிக்கொண்டு, அவளின் வீட்டை அடைகிறான் என்ற செய்தி இடம் பெறுகின்றது.*

***உதடுகளால் ஒரு வேள்வி*** *என்ற பதினாறாவது இயலில், சூழ்நிலைக் கைதியாக, மாதவியின் அழகில் மயங்கிய கோவலன் அவளுடன் வாழ ஆரம்பித்து விட்டான் என்ற நிகழ்வினைக் கவிஞர் எடுத்துரைத்துள்ளார்.* ***செய்தியா? செந்தீயா?*** *என்ற பதினேழாவது இயலில், கோவலனின் வரவிற்காகக் காத்துக் கிடந்தக் கண்ணகியிடம், கண்ணகியின் தோழி தேவந்தி வந்து கோவலன், மாதவியினைத் தன் மார்பில் சாய்த்தப்படி சென்றான் என்ற செய்தியினைக் கூறுகின்றாள். செவியில் விழுந்த தீ மாதிரி இருந்தது அச்செய்தி கண்ணகிக்கு, ஒரு பூகம்ப அதிர்வை எதிர்பார்த்தத் தேவந்திக்குக், கண்ணகியிடம் இருந்து ஒரு பூ விழும் ஓசையைக் கூடக் கேட்க முடியவில்லையே என்று வியப்புறுகிறாள். ஆனால், கண்ணகியோ, கண்ணில் தூசு விழுந்தால் இமைகள் துடிக்கலாம்; ஆனால் இங்கேதான் இமைகளே விழுந்து விட்டதே என்று அர்த்தத்துடன் கூறினாள்.*

*தேவந்தி கண்ணகியிடம் உன் கணவனைப் பழி வாங்கத் தோன்றவில்லையா? என்று கேட்டதற்கு,* ***மண்ணைத் தின்றக் குழந்தையை எந்தத் தாயாவது பழி வாங்குவாளா? என் கணவனும் இப்போது மண் தின்றுவிட்டான்*** *என்று கூறிக் கொண்டே உள்ளறைக்கு ஓடித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு கண்ணீர்க் கடலில் தத்தளித்தாள் என்று கூறியுள்ளார்.*

*இளங்கோவின் அறிமுகத்திலிருந்து, கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து சென்ற நிகழ்வு வரை ஒரே சீராகவும் அடுத்து என்ன நடக்கும், கவிஞர் எவ்விதமான புதுமையைப் புகுத்தியுள்ளார் என்ற ஆர்வத்துடனும் கதை நகர்ந்து வருகின்றது. கதையின் மையக் கருவினைப் புலப்படுத்தும் நோக்கில் இந்த பதினேழு இயல்களும் அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது. கவிஞர் பா.விஜய் கதையின் தொடக்கத்தினை செம்மையாகவும், புதுமையாகவும், புதுக் கருத்துக்களின் அணிவகுப்பாகவும் அமைத்துள்ளார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனலாம்.*

***கதையின் வளர்ச்சி***

*கதையின் வளர்ச்சி என்பது கதைத் தொடங்கி வளர்ந்து வரும் நிலையாகும். கதைப்பின்னல் அமைப்பே கதையின் வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஓர் இயல் ஒரு நிகழ்வுடன் தொடங்கி அதே நிகழ்வுடன் முடியும். அடுத்த இயல் அதே நிகழ்வின் தொடர்ச்சியாகவோ அல்லது வேறு*

*நிகழ்வின் தொடக்கமாகவோ இருக்கலாம். சில சூழல்களில் முந்தைய இயல்களில் தொடர்பற்றுப் போனக்கதையை இரண்டு, மூன்று இயல்கள் கழித்தும் தொடங்குவது உண்டு. இதனால் கதை வளர்ச்சி நிலையில் சுவை பெருகும்.*

*கதையில் இடம்பெறும் நிகழ்வுகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு, பின்னிப் பிணைந்திருக்குமாறு கதையை வளர்த்துச் செல்லவேண்டும். காரண காரியத் தொடர்புடன் படைப்பாளர் கதை நிகழ்ச்சிகளை ஒன்றொடொன்றுப் பொருத்தமாக அமைத்துக் கதைப்பின்னலை உருவாக்குவார். கதையின் வளர்ச்சியையே ஒரு திருப்பம் என்றும் கூறலாம். கவிஞர் பா.விஜய் தனது இப்படைப்பில் கதையின் நிகழ்வுகளை ஒன்றுடன் ஒன்றுப் பொருத்தமாக இணைத்துக், கதையினை வளர்த்துள்ளார். மேலும் கதையின் தொடக்கத்தில் கூறியச் சிக்கலை (கோவலன், மாதவி இணைவு) இப்பகுதியில் வளர்த்து உச்ச நிலைக்கு கொண்டு செல்கிறார்.*

**இந்திர விழாவும், இமயத்தை வீழ்த்திய விழாவும் – பிருந்தாவனத்தில் புயல் பூத்தது**

*கவிஞர் பா.விஜய் இந்திர விழாவும், இமயத்தை வீழ்த்திய விழாவும் என்ற 18-வது இயலில் இருந்து, பிருந்தாவனத்தில் புயல் பூத்தது என்ற 42-வது இயல் வரையுமான 25 இயல்களில் கதை வளர்ச்சி நிகழ்வுகளைக் கூறியுள்ளார். செய்தியா? செந்தீயா? என்ற பதினேழாவது இயலில், கோவலன் மாதவியுடன் இணைந்துவிட்டான் என்ற செய்தியைக் கண்ணகி கேள்வியுற்றாள். அவளின் துன்ப நிகழ்வுகளை அடுத்த இயலில் தொடர்ந்துக் கூறாமல், இந்திர விழா பற்றி எடுத்துரைத்துக் கவிஞர், வாசகர்களுக்குச் சலிப்புத் தட்டாமல் கதையினை வளர்த்திச் சென்றுள்ளார். 18, 19, 20 ஆகிய மூன்று இயல்கள் முழுவதிலும் புகார் நகரின் சிறப்பு, இந்திர விழாக் கொண்டாட்டம், வாழ்வியல் நெறிகள், சமுதாயச் சீர்திருத்தம் போன்ற பல பொருண்மைகளைக் கவிஞர் எடுத்துரைத்துள்ளார்.*

*தீப்பிடித்த வீணை என்ற இருபத்தியோறாவது இயல், 17-வது இயலின் தொடர்ச்சியாக, அதாவது கண்ணகியின் துன்ப நிகழ்வினை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.*

***சோகம் ஒருமுள்!***
***அது, குத்துகிற***
***இடத்தை பொறுத்துத்தான்***
***வலியின் தன்மையிருக்கும் !***
***சோகமுள்***
***கண்ணகியின்***
***காலில் குத்தவில்லை!***
***கண்ணில் குத்திவிட்டது!*** *(மேலது,1:21,ப.185)*

*என்ற வரிகளால் கண்ணகியின் துயரின் அளவை அறியலாம். சிலம்பில் கண்ணகி கோவலனைச் சந்திக்க முற்படமாட்டாள். ஆனால் இங்குக், கடலாடு விழாவிற்குக் கட்டாயம் தன் கணவன் வருவான், அவனைச் சந்தித்து நல்வழி கூறலாம் என்ற எண்ணத்துடன் கண்ணகி புறப்படுகின்றாள்.*

***சேற்றில் உதிக்கலாமா வானவில்*** *என்ற 22-வது இயலில், இந்திர விழாவின் போது மாதவி, மேடையில் பாவைக் கூத்து ஆடியதால், கோவலன் முதல் முறையாக மாதவியின் மீது மனதளவில் கோபம் கொள்கிறான். இதையறிந்த மாதவி, கோவலனைத் தன் அழகால் சமாதானப்படுத்துகிறாள்.*

***மரத்துக்குக் குயில் சுமையா?*** *என்ற 23-வது இயலில், கோவலனும், மாதவியும் கடலாடு விழாவிற்குச் செல்லும் வழியில், இருவரும் தமிழ் விளையாட்டு விளையாடுகின்றனர். அதில், கோவலன் தோல்வியுறுகிறான், போட்டியின் நிபந்தனைப்படி, வெற்றி பெற்ற மாதவியினைக் கோவலன் தன் கைகளால் தூக்கிக் கொண்டு வணிகர் வீதியில் நடக்கிறான். இக்காட்சியினைக் கண்ணகி காண்பதாக இவ்வியல் நிறைவுறுகிறது.*

***தாரமா? அவதாரமா?*** *என்ற 24-வது இயலில், மேற்கூறியக் காட்சியைக் கண்டு வந்தக் கண்ணகி, தன் கணவனுக்காகத் திராட்சைப் பழச்சாறு கொடுத்தனுப்புகிறாள். இதைக் கண்ட மாசாத்துவார், கண்ணகியின் தன்மையால் வியப்புற்று அவளைப் போற்றுகின்றார்.*

***கல்லாய் விழுந்த சொல்*** *என்ற 25-வது இயலில் கோவலனுக்கும் மாதவிக்கும் மணிமேகலை என்ற பெண் குழந்தை பிறக்கின்றது. மணிமேகலையை மாதவி தாலாட்டும் போது பாடலின் பொருளைப் புரிந்து கொள்வதில் இரண்டாவது முறையாகக் கோவலன் மாதவியின் மீது கோபப்படுகிறான்.*

*26-வது இயலில், கோபமாக இருக்கும் கோவலனைச் சமாதானப்படுத்த மாதவி, தனது தாயானச் சித்ராபதியின் துணையை வேண்ட, அவளோ கோவலனின் மானத்தின் மீது கை வைத்ததால், ஆத்திரமுற்றக் கோவலன் மாதவியை விட்டுப் பிரிகின்றான் என்று கதையின் தொடக்கத்தில் கூறிய சிக்கலுக்குத் திருப்பத்தைக் கொண்டு வருகிறார்.*

*27 மற்றும் 28-வது இயல்களில் கோவலன் மனம் திருந்தி மீண்டும் கண்ணகியுடன் இணைந்து வாழ வருகின்றான். கண்ணகியும் திருந்தி, திரும்பி வந்தக் கணவனை ஏற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளார்.*

*29-வது இயல் முதல் 32-வது இயல் வரை, கோவலனும், கண்ணகியும் புகாரை விட்டு வெளியேறுதல், கோவலனைத் தவறாகப் பேசியத் தண்ணீர்ப் பந்தல் பணியாளிடம் கண்ணகி கோபம் கொள்ளல், கவுந்தியடிகளிம் போய் சரணடைதல், அவருடைய ஆசிரமத்தில் தொண்டு செய்தல், அடிகளாரிடம் மதுரைப் பயணம் பற்றி எடுத்துரைத்தல், அவர் 2 வழிகளைக் கூற அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயணம் மேற்கொள்ள மூவரும் தயாராதல் போன்ற நிகழ்வுகளை அடுத்தடுத்துக் கூறி கதையினை வளர்த்துள்ளார்.*

*33 முதல் 38-வது இயல் வரை மதுரை நோக்கிய நெடும் பயணத்தையும், பயணத்தில் கண்ணகியின் நிலை, கோவலனின் உடல் நலமின்மை, மூவரும் அன்னவாசல் மலையின் சித்திரங்களைக் கண்டு வியப்படைதல், கோவலனும், கண்ணகியும் மனதளவில் மேலும் நெருக்கமாதல் என்ற நிலையினை எடுத்துக் கூறியதுடன், மாதவி துறவறம் பூண்டச் செய்தியைக் கேள்விப்பட்டக் கோவலனின் மனதைக் கண்ணகி தேற்றும் நிலை வரையுள்ள நிகழ்வுகளைக் கவிஞர் ஒரே சீராகவும், தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளார்.*

*மதுரை வாழ்க்கை என்னும் 39-வது இயலில், கவுந்தியடிகளார், கோவலனையும், கண்ணகியையும் இடைக்குலப் பெண்ணான மாதரியிடம் ஒப்படைக்கின்றார். இதனை,*

***மருத்துவச்சியிடம்***
***தன் குழந்தையை ஒப்புவிக்கும்***
***தாய்போல்***
***அடிகளின் கண்களில்***
***அணைக்கட்டு உடைந்தது!*** ***(மேலது,பா.2:39,ப.132)***

*என்ற வரிகளால் அறியலாம்.*

***வசந்த கால வனக்குயில்கள், காதலாகக் கசி*** *என்ற இயல்களில், கோவலன், கண்ணகி இருவரும் மதுரையில் இனி நிம்மதியாக தங்களின் வாழ்வினைத் தொடங்கலாம் என்ற மனநிலையில் இன்பமாக உள்ளதை எடுத்துரைக்கின்றார்.*

***பிருந்தவானத்தில் புயல் பூத்தது*** *என்ற 42-வது இயலில், கண்ணகி தனது ஒற்றைச் சிலம்பைக் கழற்றி கோவலனிடம் கொடுக்கின்றாள். அவனும் மதுரையின் வணிகர் வீதியில் அதை நாணத்துடன் விற்க முயல்கிறான். அப்போது பொன் முடிப்பு தருவதாய் சொன்ன பொற்கொல்லன், கோவலனைத் திருடன் எனக் குற்றம் சாட்டி அரண்மனைக் காவலர்களிடம் பிடித்துத் தருகின்றான்.*

*இந்திர விழாவின் தொடக்கத்தில் இருந்து, கோவலன் கள்வன் என்று பொய்க் குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகும் நிகழ்வு வரை, ஒரே சீராகக் கதையைக் கவிஞர் வளர்த்துக் கொண்டு வந்துள்ளார். கதையின் வளர்ச்சியானது, உச்சக்கட்டத்தை நோக்கிச் செல்கின்றது. கதையின் மையக் கருவினைக் கொண்டே கவிஞர் கதையை வளர்ச்சி பெறச் செய்துள்ளார்.*

***கதையின் உச்சக்கட்டம்***

*கதையின் தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வரும் முரண்பட்ட இரண்டு ஆற்றல்களும் தத்தம் வன்மையைத் தொடர்ந்து சமநிலையில் செலுத்த முடியாது. ஒன்றன் ஆற்றல் இன்னொன்றினை மீறுவது கதை வளர்ச்சியில் முன்போ, பின்போ ஏற்படும். இதனைத் திருப்பு மையம் அல்லது உச்சம் என்பர். கதையின் உச்சம் என்பது இயற்கையாகவும், முன் நிகழ்ச்சிகளின் விளைவாகவும் தோன்றும் என்பர்.*

***ரத்தம் குளித்தத் தீர்ப்பு***

*கவிஞர் பா.விஜய் எழுதிய காற்சிலம்பு ஓசையிலே என்னும் இப்படைப்பில் 43-வது இயல் உச்சக்கட்டமாக அமைந்துள்ளது.*

***ரத்தம் குளித்தத் தீர்ப்பு*** *என்னும் 43-வது இயலில், கருஞ்சேனன் என்ற பொற்கொல்லன் கோவலனின் மீது சிலம்பு திருடியதாகப் பொய்க்குற்றம் சாட்டி, பாண்டிய மன்னனின் கொலைத் தண்டனையைப் பெற்றுத் தருகிறான். பாண்டிய மன்னனும் கோவலனைத் தீர விசாரிக்காமல், அவனின் தலையைத் துண்டிக்க ஆணை பிறப்பிக்கிறான். கோவலன் அலறித் துடிக்கிறான். நீதிமன்ற விசாரணை ஏதுமின்றி, இவ்வாறு தண்டனைக் கொடுக்கப்பட்டுவிட்டதே என்று கோவலன், இது தேசமா? இதுதான் தீர்ப்பா? என்று பலவாறாகப் புலம்புகின்றான். பின், இறுதியாக ஒரு முடிவுக்கு வருகின்றான்.*

***ஒன்றும் அறியாத***
***ஒரு பேதைப் பெண்ணின்***
***இதயத்தை இம்சித்த***
***பாவியல்லவா***
***நான் ?***
***எனக்கு வேண்டும்.*** ***(மேலது, பா.2:43, ப.168)***

*என்ற வரிகளின் மூலம் கோவலன் தான் செய்த குற்றத்திற்கானத் தண்டனை இதுதான் என்று தனது தவறினை உணர்ந்து வருந்துகிறான். கோவலனின் தலைத் துண்டிக்கப்பட்டு உயிர் பிரிவதாகக் கவிஞர் கூறியுள்ளார். கதையின் உச்சக்கட்டமாக, கோவலன் மனம் திருந்தியதையும், ஆனால் கண்ணகியுடன் சேர்ந்து வாழும் நிலை ஏற்பட்டும் அவனால், சேர்ந்து வாழ முடியாத நிலையினையும் கவிஞர் எடுத்துரைத்துள்ளார்.*

***கதையின் திருப்பம்***

*முடிவை நோக்கிச் செல்லும் இப்பகுதியை* ***'வீழ்ச்சி'*** *என்றும் கூறுவர். கதையின் இன்ப முடிவு அல்லது துன்ப முடிவை ஒட்டி வீழ்ச்சிப் பகுதி அமையும். உச்சத்திற்குப் பிறகு அதனில் இருந்து விளைந்த புதிய நிகழ்ச்சி வளர்ச்சி பெறும். உச்சம் வரைக் கதைப் போக்கின் முடிவான நிலை எங்ஙனம் இருக்கும் என்பதைக் கதையைப் படிப்பவர்களால் உணர முடியாது. ஆனால் உச்சத்திற்குப் பிறகு அதனைப் பெரும்பாலும் உணர முடியும்.*

***கொற்றனே குற்றவாளி – மதுரை எரிந்தது***

*44 மற்றும் 45-வது இயல்களில் கவிஞர் பா.விஜய் வீழ்ச்சியின் நிகழ்வுகளை அமைத்துள்ளார். வைகை ஆற்றில் தண்ணீர்எடுக்க வந்த மாதரியின் செவிக்குக் கோவலன் கொலையுண்டச் செய்தி கிடைத்தது. ஆய்ச்சியர் குரவை ஆடிக் கொண்டிருந்த கண்ணகியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு, மாதரி கோவலன் இறந்த செய்யினைத் தெரிவிக்கின்றாள். இதனைக் கேட்ட கண்ணகி,*

***காய்ச்சிய ஈயம்***
***கண்களில் இறங்குதல் போல்***
***துடிதுடித்தாள் கண்ணகி!*** ***(மேலது, பா.2:44, ப.172)***

*என்ற வரிகளால் கண்ணகியின் துயரினைக் கவிஞர் புலப்படுத்தியுள்ளார். தன் புதிய வாழ்க்கைப் பற்றிய நம்பிக்கையில் இருந்தக் கண்ணகி, அந்த நம்பிக்கைக்குக் காரணமாக இருந்த கோவலனைப், பாண்டிய மன்னன் கொன்றொழித்தான் என்ற செய்தி கேட்டுப் பொங்கி எழுதல், மன்னன் அவையில் கொற்றவை உருவில் மன்னன் முன் தன் சிலம்பை உடைத்து உண்மையை நிலைநாட்டி, மன்னனும், அரசியும் மாண்டு போகச் செய்தல், அப்படியும் தனது கோபாவேசம் தீராமல், தனது இரண்டு முலைகளையும் அறுத்துத் தூர எரிந்து, மதுரையையே தீக்கிரையாக்கினாள் என்னும் நிகழ்வுகள் கதையின் வீழ்ச்சிப் பகுதியை நிறைவு செய்கின்றன.*

***கதை முடிவு***

*உச்சத்தின் தோற்றம் முன் நிகழ்ச்சிகளின் விளைவாக அமைவது போல், முடிவும் முன் நிகழ்ச்சிகளின் பொருந்திய விளைவாக அமைய வேண்டும். முடிவை ஒட்டியே கதை, இன்பவியல் கதையா?, துன்பவியல் கதையா? என்பது தீர்மானிக்கப்படுகிறது. கதையின் தொடக்கம் போலவே முடிவும் கதையின் சிறப்புக் கூறுகளின் ஒன்றாகும். சிறந்தத் தொடக்கம், ஆர்வத்தைத் தூண்டிப் படிக்கச் செய்வது போல, முடிவும் ஒரு வாசகனைச் சிந்திக்க வைக்க வேண்டும். ஒரு படைப்பாளர் தம் கதைக்குத் தரும் முடிவு கதையை முடித்து வைப்பதோடு அமையாது, படிப்பவர் உள்ளத்தில் கதை பற்றிய*

*எண்ணத்தை என்றும் முடிவு இல்லாமல் எழுப்பிக் கொண்டே இருக்கச் செய்ய வேண்டும். சுருங்கக்கூறின், கதை முடிவு படைப்பாளரின் படைப்புத் திறனைப் புலப்படுத்தும் கலை நுட்பத்தில் ஒன்றாகும்.*

**வஞ்சிக்காண்டம் - தாயே வாழ்க**

*கவிஞர் பா.விஜய் தனது இப்படைப்பில் 46, 47 மற்றும் 48-வது இயல்களில் கதையின் முடிவு நிகழ்வுகளை அமைத்துள்ளார். சாத்தனார் கண்ணகியின் கதையைக் கூறி முடித்ததாகவும், இளங்கோவடிகள் கண்ணகியின் வரலாற்றை எழுதி முடித்ததாகவும், சேரன் செங்குட்டுவன், அரசி வேண்மாள், மக்கள் என்று அனைவரும் அவளின் கதையைக் கேட்டு வாழ்த்தியதாகவும், முதலில் கவிஞர் கூறியுள்ளார். பிறகு சேரன் செங்குட்டுவனின் மனதில் தாய் போல, தெய்வம் போல, தேவதைப் போல, தோழி போல, தலைவி போலக் கண்ணகி தோன்றுகிறாள். சரித்திரத்தில் இனி கண்ணகி என்னும் சரித்திர நாயகியின் இடம் என்ன என்று குழம்பித் தவிக்கிறான். சேரனின் குழப்பத்தை அரசி வேண்மாள்தீர்த்து வைக்கிறாள்.*

***"மனிதருள் தெய்வமான***
***கற்பரசி கண்ணகிக்கும்***
***ஏனொரு ஆலயம்***
***எழுப்பக் கூடாது? " என்றாள்.*** ***(மேலது,பா.2:46,ப.189)***

*சேரனும் கண்ணகிக்குக் கோவில் கட்டலாம் என்று கூறுகிறான். அப்போது, வடக்கில் கனக, விசயர் கூடி மும்முடி வேந்தர்களையும் இகழ்ந்ததாகச்சேரன் கேள்வியுறுகிறான். உடனே படையைத் திரட்டிக் கொண்டு வடக்கு நோக்கி போர் புரியச் செல்கிறான். அங்கே போரில் வெற்றி பெறுகிறான். தோல்வியுற்றக் கனக விசயர் தலைகளின் மேலேயே கண்ணகிக்குக் கோயில் கட்டுவதற்கானக் கல்லைச் சுமந்து வரச் செய்கிறான். வடக்கிலிருந்து கொண்டு வரப்பட்ட கல்லில் கண்ணகி சிலை உருவானது, கோயிலும் உருவானது. குடமுழுக்கிற்குப் பல முக்கிய பிரமுகர்கள் வந்தனர். கரிகால் பொருவளத்தான், கயவாகு மன்னன், குடுகு கொங்கர், மாளவ வேந்தன், கனக, விசயர், வெற்றிவேல் செழியப் பாண்டியன், மாதரி, ஐயை, சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், கிராமத் தலைவர்கள், ஊர் மக்கள், இளங்கோவடிகள் மற்றும் மாதவியும், மணிமேகலையும் வந்து கண்ணகி கோவிலின் குடமுழுக்கினை சிறப்புறச் செய்தனர். இறுதியாக இளங்கோவடிகள் இயற்றியச் சிலப்பதிகாரத்தினை இலங்கை மன்னன் கயவாகு வெளியிட மாதவி அதனைப் பெற்றுக் கொள்வதாகக் கவிஞர் கதையினை முடிவு பெறச் செய்துள்ளார்.*

**தொகுப்புரை**

- *கதையமைப்பிற்கு கதைத் தொடக்கம் முதல் கதை முடிவு வரையிலான ஐந்து முக்கியக் கூறுகள் இன்றியமையாதவையாகும்.*
- *கதை வெளிப்பாட்டுத் திறனில் தலைமை இடத்தைப் பெறுவது கதையின் தொடக்கமே ஆகும்.*
- *கவிஞர் பா.விஜய் கதையின் மையக் கருவினை புலப்படுத்தும் நோக்கில் கதையின் தொடக்கத்தினை செம்மையாகவும், புதுமையாகவும் படைத்துள்ளார்.*
- *கதையில் இடம்பெறும் நிகழ்வுகள்யாவும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு பின்னிப் பிணைந்திருக்குமாறு கதையானது வளர்ச்சி நிலையை எய்துகிறது.*
- *கதையின் தொடக்கத்தில் கூறியச் சிக்கலை மேலும் வளர்த்து கதையினைக் கவிஞர் உச்சகட்டத்திற்கு நகர்த்திக் செல்லும் பாங்கு சிறப்புடையதாகும்.*
- *கதையின் உச்சக்கட்டமாக கோவலனின் இறப்புச் செய்தியைக் கூறுகிறார். இதன் பிறகு கண்ணகியின் நிலை என்ன என்பது பற்றிய சிந்தனையையும் வாசகர் மனதில் ஏற்படுத்துகின்றார்.*
- *கதைப்போக்கின் முடிவான நிலையை உணர்த்தும் திருப்பமானது கண்ணகியின் வாழ்வினையும் திருப்பும் பாங்குடையதாக மாறுகிறது.*
- *படைப்பாளரின் படைப்புத் திறனைப் புலப்படுத்தும் கலை நுட்பத்தில் கதை முடிவும் ஒன்றாகும்.*

- *சிலம்பின் இயற்கை இகந்த நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிட்டுக் கவிஞர் கதையின் முடிவினை கூறியுள்ளார். கவிஞரின் பகுத்தறிவுச் சிந்தனைக்கேற்றவாறே அவரின் கதை அமைப்பும் விளங்குகின்றது.*

**முடிவுரை**

*சிலம்பில் வரும் கிளைக் கதைகள், சமயப் பொதுவுடைமை நிகழ்வுகள், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஒதுக்கி விட்டு, தனது கருத்திற்கும், பகுத்தறிவுக் கொள்கைக்கும் ஏற்ப கவிஞர் பா.விஜய் கோவலன், கண்ணகி தொன்மத்தினை மேற்கூறிய ஐந்து கூறுகளின் துணையுடன் காற்சிலம்பு ஓசையிலே என்னும் பெயரில் அமைந்த கதையுடன் கூடிய கவிதையினை மிகச் சிறப்பாக அமைத்துள்ளார் எனலாம்.*

**முதன்மைச் சான்றாதாரம்**

- *விஜய்.பா, காற்சிலம்பு ஓசையிலே - பாகம் 1 (கவிதை) முதற்பதிப்பு மார்ச் - 2005 காற்சிலம்பு ஓசையிலே - பாகம் 2 (கவிதை) இரண்டாம் பதிப்பு செப்டெம்பர் - 2006, குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, சென்னை - 600 017.*

**துணைமைச் சான்றாதாரம்**

- *வேங்கடராமன்.சு, அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, முதற்பதிப்பு, 1977, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 600 002.*